# பாரதியும் காங்கிரசும்



# பாரதியும் காங்கிரசும்

வரலாற்று ஆய்வாளர்

**செ. திவான்,** எம்.ஏ., எம்.ஃபில்.,

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

**சுஹைறனு பதிப்பகம்**

106 F5, திருவனந்தபுரம் சாலை,

பாளையங்கோட்டை - 627 002.

✆ 0462 - 572665

முதற்பதிப்பு : 1998 ஜூன்
விலை : ரூபாய் பத்து மட்டும்
உரிமை : ஆசிரியருக்கே

## சமர்ப்பணம்

எனது முயற்சிகளுக்கு ஆதரவு காட்டி வரும் குற்றாலம் பராசக்தி தன்னாட்சி கல்லூரி தாவரவியல் பேராசிரியை, மதிப்பிற்குரிய சகோதரியார்

**V. ஜெயாபாரதி,** M.Sc., M.Phil., அவர்களின்

தாய் தந்தையர்

**S. வெங்கிடசுவாமி**

**நாச்சியாரம்மாள்** ஆகியோருக்கு ....

நன்றி

எனது முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வரும்
மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர்
தமிழர் தலைவர்

**வைகோ** M.P.



நெல்லை மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் திரு. **டி.ஏ.கே. இலக்குமணன்,**
நெல்லை மாநகர் மாவட்டச் செயலாளர் திரு. **டி.பி.எம். மைதீன்கான்,**
தேர்தல் பணி துணைச்செயலாளர் திரு. **C.A.R. குட்டி (எ) சண்முகசிதம்பரம்,**
பேராசிரியப் பெருமன்ற மாநில துணைத்தலைவர் பேராசிரியை **தமிழ் மகள்**
ஆகியோருக்கு இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செ. திவான்**

அச்சிட்டோர் : கனி ஆப்செட், நெல்லை - 6. ✆ 333180

# எண்ண அலைகள்...


பாரதி வாழ்க்கையில் நிகழ்ந்த காங்கிரசோடு தொடர்புடைய நிகழ்வுகளிலும், கவிதைகளிலும், கட்டுரைகளிலும், கதைகளிலும் காங்கிரஸ் தொடர்புடைய தலைவர்கள் பற்றியும், செய்திகள் பற்றியும், பாரதி எழுதியுள்ளவற்றை கருத்தில் கொண்டு, "காங்கிரசும் பாரதியும்" என்ற கட்டுரையை அனுப்ப வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி 5.12.95ல் பாரதியார் பற்றிய கட்டுரைப்போட்டி ஒன்றை அறிவித்தது. அதற்காக அடியேன் அனுப்பிய கட்டுரையே இச்சிறுநூல்.

பாரதி உயிரோடு இருந்தபோதே அவரை கைவிட்டது அன்றைய காங்கிரஸ்; பாரதி பற்றிய கட்டுரைப் போட்டியை அறிவித்து விட்டு, ஆண்டுகள் பல கடந்த பின்பும் அதுகுறித்து அறிவிப்பு எதுவும் வெளியிடாமல் பாரதி பற்றிய கட்டுரையை கைவிட்டது இன்றைய காங்கிரஸ்.

பாரதி பற்றி எத்தனையோ நூல்கள் தமிழில் வெளிவந்த போதிலும், பாரதிக்கும் காங்கிரசுக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து அறியும் வண்ணம் கட்டுரைப் போட்டிக்காக அனுப்பிய அந்த விவரங்களை இச்சிறுநூலாக்கி உங்கள் முன் வைக்கிறேன்.

எனக்கு உறுதுணையாக இருந்துவரும் எனது மைத்துனர் S.M.A.Q.ஜெய்லானி, எனது துணைவியார் திவானிஜஹானரா, அண்ணன் ஐ.சாமுவேல், S.N.சுப்பையா, பாளை மு. அருணாசலம், தி. நஜாத், தி.சுஹைனு, புக் ரவி, புக் மணி, சகோதரர்கள் D.V. தங்கசாமி, P.S.முத்து, ப. கல்லத்தியான், செ. இப்ராகிம், செ. இஸ்மாயில், செ. அசன், கா.சுப்பிரமணியன், நூலை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த அண்ணன் எம்.சாகுல் ஹமீது, (கனி ஆப்செட்) ஆகியோர் எனது நன்றிக்கு உரியவர்கள்.

இதுபோன்ற எனது முயற்சிகள் வெற்றி பெற இறைவன் அருள் புரிவானாக.




செ. திவான்,
கல்வித்தந்தை சுலைமான் இல்லம்,
106 F5, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.
✆ 0462 - 572665

வரலாற்று ஆய்வாளர்

## செ.திவான், M.A., M.Phil., எழுதிய நூல்கள்

**விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்**

*(சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10000 பெற்ற நூல்)*

நிகரற்ற பெருவீரன்

**மருதநாயகம் கான்சாகிப்**

*(உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)*

**திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்**

*(தமிழக அரசு - மத்திய அரசு நூலகங்களுக்கு வாங்கப்பட்ட நூல்)*

**நபி பெருமானாரின் நாற்பது பொன்மொழிகள்**

**தக்கலை பீர்முகம்மது (ரஹ்) ஞானப் பாடல்களும் சரிதையும்**

**இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்**

**வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்**

**வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை**

**வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்**

**வ.உ.சி.யும் பெரியாரும்**

**கலைஞரை வென்ற வைகோ**

**வாகை சூடி வரும் வைகோ**

**உண்மையின் சவுக்கடி**

**குடை**

**வைகோவின் பொன்மொழிகள்**

**குடைப் புரட்சி**

**சிந்தனைக்கு**

**ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்!**

**கூடங்குளம் அணுஉலையை மூடு!**

**மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்**

தென்னக வரலாற்றைத் திருத்து

**தெற்கில் ஒலித்த தீன்குரல்** (விற்பனையில்)

**விடுதலைப் போரில் விஸ்வகர்மாக்கள்** ( ,, )

**பாரதியும் காங்கிரசும்** ( ,, )

விரைவில்

**வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்** (ஆய்வு நூல்)

# பாரதியும் காங்கிரசும்

“ *பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்*

*பாரத நாடு* ” என்று மார்தட்டிய தேசியக் கவிஞனின் கவிதை வேட்டுக்களைக் கேட்டு “ பார் அதிர்ந்தது”; அதனால் தான் என்னவோ “பாரதி” யென்று பெயர் சூட்டி மகிழ்ந்தது.

நடுத்தர உயரம், மாநிறம், சுழலும் கண்கள், அகன்ற நெற்றி, அதிலே குங்குமப்பொட்டு, துடிதுடிக்கும் உதடு, ஓயாது பாடும் வாய், கறுத்து அடர்ந்து முறுக்கிவிடப்பட்ட மீசை, தலையிலே சிவப்புத்துணியால் கட்டப்பட்ட பெரிய முண்டாசு, அதிலிருந்து வால்தொங்கும், ஒரு கிழிந்த கோட்டு, கையிலே புத்தகம், இராணுவ வீரன் போன்ற அளந்த நடை இது தான் பாரதியின் தோற்றம். இந்திய தேசியத்தின் விடுதலையில் பங்கு வகித்திட்ட காங்கிரஸ் பேரியக்கத்தில் பாரதிப் புலவனின் பங்குதான் என்ன ?

## இளமைக்காலம்

வீரத்தின் விளைநிலமான நெல்லைச் சீமையில் எட்டயபுரம் ஜமீன்பகுதியில் 11.12.1882இல் சின்னச்சாமி-இலக்குமி அம்மாளின் திருப்புதல்வராகத் தோன்றிய பாரதி “ இந்த முளை விதைக்குள்ளேயே வைரம் பாய்ந்து வந்துவிட்டதோ?” கலைமகள் எழுதிய மனிதப்புத்தகமாக இவன்? சுப்பையா! நீ பையனல்லன் பாரதி! பாரதி![1] என்று போற்றப்படுமளவில் இளமையிலேயே சிறந்து விளங்கினார்.

## பருத்திஅறவை ஆலை

1892 பிப்ரவரி 6 ஆம் தேதியன்று பாரதியாரின் தந்தை எட்டயபுரத்தில் பருத்தி அறவை ஆலையைத் துவக்கினார்.

“ ஏழைகள் மீது இரக்கத்தாலும், நம்மவர் நலங்கருதியும் இவர் எட்டயபுரத்தில் யந்திரமணைச்சாலை யேற்படுத்த முன்னின்று முயன்று முடித்தார். இந்தப் பிரதேசத்தில் பருத்தியந்திரமணைச்சாலை முதலில் ஏற்படுத்தத் துணிந்தவர் இவரே. தற்காலம் எட்டையபுரம் சமஸ்தானாதிபதி யாயிருக்கும் பண்டித அரசருக்கு இவர் ஆப்தநட்பாளர். தணிகரும்,

1. கவிஞர் வைரமுத்து, கவிராஜன் கதை, 1987, பக், 18.

பொதுநலப் பிரியரும், அருகிய வூரில் இவர் முயன்று ஸ்தாபித்த பருத்தியறவைச்சாலை தற்காலம் பராதீனப்பட்டு நடப்பதன் சரிதமும், தொழிலபிவிருத்தி முதலிய நம்மவர் முன்னேற்ற முயற்சிகளால் இவர் கைப்பணமிழந்து வறுமையுற்று வருந்திய விருத்தாந்தங்களும் இக்கதைக்கு அவசியமற்றவை. இத்தகைய அருள், அறிவு, ஆற்றல் நிறைந்திருந்த ஸ்ரீசின்னஸாமி அய்யர் அவர்களின் முதன் மனைவியின் வயிற்றுதித்த ஔரஸபுத்திரரே நம்வரகவி''[2] என்று நாவலர் சோமசுந்தரபாரதியார் எட்டயபுரம் சின்னசாமி அய்யரின் ஆலை குறித்து எழுதியுள்ள செய்திக்குள்ளே அடங்கியிருக்கும் விஷயம் தான் என்ன? பாரதியை அது எவ்வாறு பாதித்தது? ஆங்கிலேயர்களின் மேல் அளவிலா வெறுப்பை பாரதிக்கு எவ்வாறு அது ஏற்படுத்தியது?

## தேசபக்தியின் வித்து

பாரதியின் தந்தையார்துவங்கிய காட்டன் ஜின்னிங் பாக்டரியின் தொழில் முயற்சி 20 ஆயிரம் ரூபாய் பங்குத்தொகையுடன் தொடங்கப் பட்டது. இதில் எட்டயபுரம் ஜமீன்தார் 50 பங்குகள் வாங்கியிருந்தார். இந்தத் தொழிற்சாலைக்கென மதுரை வரையிலும் வந்து சேர்ந்துவிட்ட சில எந்திர சாதனங்களை, மதுரையிலிருந்து எட்டயபுரத்துக்குக் கொண்டு செல்ல அன்றைய ஆங்கிலேயே அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.[3]

"சின்னச்சாமி அய்யர் தமது ஆலை முயற்சி தொடங்கிய காலத்தில் அவருக்குப் பணம் மற்றும் பிற வழிகளில் உதவமுன்வந்த எட்டயபுர மன்னரும், மற்றும் பணம் படைத்த நண்பர்களும், பின்னர் ஆங்கிலேயே அரசாங்க அதிகாரிகள் அளித்து வந்த நிர்ப்பந்தத்தின் காரணமாகத் தமது ஆதரவையும், உதவியையும் வாபஸ் வாங்கிக் கொண்டதாகவும், அதன் காரணமாக சின்னசாமி அய்யர் கைமுதலையும் இழந்து தொழில் முயற்சியிலும் தோற்று நசித்துப் போய்விட்டதாகவும், கட்டிய ஆலையை நடத்த முடியாமல் போய்விட்டதாகவும் இயந்திரங்களை கழற்றி விற்க நேர்ந்ததாகவும், அவர் கட்டிய ஆலை எட்டயபுரத்தில் இருந்து ஒரு மைல் தள்ளி மேற்குத் திசையில் எட்டயபுரத்துக்கும் பிதப்புரம் என்ற கிராமத்திற்கும் இடையே சிதிலமடைந்த பாழுங்கட்டிடமாக இன்றும்

---

2. நாவலர் சோமசுந்தரபாரதியார், ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் சரித்திரச்சுருக்கம், (1922) துன்மதி மார்கழி, தூத்துக்குடி, பக்கம், நு.ச.

3. பாரதியின் தம்பி சி.விசுவநாத அய்யர், தொ.மு.சி. ரகுநாதனிடம் நேரில் அளித்த தகவல்.

கிடப்பதாகவும்[4] நான் அறிய வந்தேன் என்ற தொ.மு.சி.யின் கருத்தினை கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

## *ஊணர் செய்த சதி*

கி.பி 1888இல் எட்டயபுரத்தில் ஆங்கிலப்பள்ளியில் கல்வி பயின்றவர் பாரதி. பின்னர் பாரதி 1894இல் நெல்லைநகர் இந்துப்பள்ளியில் ஐந்தாம் படிவம் படித்துக்கொண்டிருந்தார்; அந்த வேளையில்தான் பாரதியின் தந்தையின் ஆலைத்தொழில் ஆங்கிலேயர்களால் சின்னாபின்னமாக்கப் பட்டது. தனது ஸ்வசரிதையில் 21வது பாடலில்

*" நெல்லையூர் சென்று அவ்வூணர் கலைத்திறன்*
*நேருமாறு எனை எந்தை பணித்தனன்"*

என்று சொல்லிய பாரதி 39வது பாடலில்

*" ஈங்கி தற்கிடை யெந்தை பெருந்துயர்*
*எய்தி நின்றனன், தீய வறுமையான்;*
*ஓங்கி நின்ற பெருஞ்செல்வம் யாவையும்*
*ஊணர் செய்த சதியிலிழந்தனன்* [5]

என்று தனது தந்தை வறுமை எய்தியதுபற்றிக் குறிப்பிடுகிறுர்.

1906 செப்டம்பர் 25இல் மேலைநாட்டுக் கவி வடிவத்தில் தான் எழுதிய "சந்திரிகை" என்ற கவிதையில் சில சொற்களுக்குப் பொருள் எழுதிய பாரதி, ஊணப் புலவன் என்பதற்கு ஆங்கிலப் புலவன் என்று விளக்கம் தந்துள்ளார். [6]

எனவே ஆங்கிலேயர் (ஊணர்) செய்த சதியினால் தான் பாரதியின் தந்தை தனது தொழில் முயற்சியில் தோல்விகண்டு, செல்வம் முற்றும் இழந்து வறியவரானார் என்பது தெள்ளத்தெளிவாகிறது.

## *ஆங்கிலேயர்-புலைஞர்*

1897 ஜனவர் 27 ஆம் நாளில் பதினான்கு வயதான பள்ளிப் பாலகன் பாரதி எட்டயபுரம் மன்னருக்கு தனது பள்ளிப் படிப்பைத் தொடர பண உதவி கேட்டு அகவற்பா வடிவில் விண்ணப்பம் அனுப்புகிறார்.[7]

---

4. ரகுநாதன், பாரதி, காலமும் கருத்தும், 1982, பக் 42.
5. டி.வி.எஸ்.மணி, சீனி விசுவநாதன், பாரதியார் கவிதைகள், 1992, பக் 237.
6. பெ. தூரன், பாரதி தமிழ், 1986 பக். 108 - 109
7. சி. விசுவநாதன் வெளியிட்ட கவிதை கலைமகள், ஆகஸ்ட் 1974

அந்தக்கவிதையில் "தமிழ் மொழியை அடிமை கொண்டு ஆட்சி செலுத்தி வந்த ஆங்கிலத்தை புன்மொழி என்றும், நாட்டை ஆண்ட ஆங்கிலேயரைப் புலைஞர் என்றும், இழித்துரைக்கிறார் பாரதி. ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட குட்டி சமஸ்தானாதிபதியான எட்டயபுரம் மன்னரிடம் உதவி கோரி அவரது சந்நிதியில் பாடுகின்ற பாடலிலேயே ஆங்கிலேயரைப் புலைஞர் என்று பாரதி கூறத் துணிந்திருக்கிறான் என்றால் அவன் மனத்தின் அடியாழத்தில் ஆங்கிலேயர் மீது எத்தனை வெறுப்பு குடி கொண்டிருந்தது என்பதை நாம் இதன் மூலம் ஊகித்துக் கொள்ளலாம்.[8]

## காசில்லாக் கவிஞன், காசியில் அடைக்கலம்

1887இல் தாயை இழந்து, 1898இல் தந்தையை இழந்து, தன்னை ஆதரிப்போர் இன்றி அவதிக்குள்ளாகி, கடையம் செல்லப்பாவின் மகள் செல்லம்மாளை மணந்து கஷ்ட வாழ்க்கையை நடத்தி வந்த பாரதிக்கு கதியாக அமைந்தது காசி நகரம்; காரணம் பாரதியின் அத்தை குப்பம்மாளும், அவரது கணவர் கிருஷ்ணசிவனும் காசியில் செல்வாக்கோடு இருந்தனர். அங்கே அவர்களிடம் அடைக்கலம் புகுந்த பாரதி ஹனுமந்த கட்டத்தில் சிவமடத்தில் தங்கினார்.

" காசிக்குச் சென்றதும் பாரதியார் அத்தையார் அவரை கலாசாலையில் சேர்த்தார். இந்தி, சமஸ்கிருதம் முதலியவைகளை வெகு சீக்கிரத்தில் கற்றுப் பிரவேசப் பரிட்சையில் முதலாவதாகவும் தேறினார்."[9]

அங்கிருந்து கொண்டே கிறிஸ்தவ மிஷினரிக் கல்லூரியிலும் பயின்றார். அலகாபாத் பல்கலைக்கழகத்தில் நுழைவுத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்வு பெற்றார். 1.1.1903இல் இந்திய வைசிராய் கர்சான் நடத்திய தர்பாரில் கலந்து கொள்ள வந்த எட்டயபுரம் மன்னர் திரும்பும் வழியில் காசிக்குச் செல்கிறார். காசியில் பாரதியைச் சந்தித்த எட்டயபுரம் மன்னர் பாரதியை திரும்பவும் எட்டயபுரத்திற்கே அழைத்து வந்தார்.

## தமிழாசிரியர் பாரதி

எட்டயபுரம் ஜமீனில் செய்தி நிருபராகப் பணியாற்றிய பாரதி, ஜமீன்தாரோடு மனவேற்றுமை கொண்டு எட்டயபுரத்தை விட்டு வெளியேறினார். மதுரை சேதுபதி உயர்தரப்பள்ளியில் 1.8.1904 முதல்

8. ரகுநாதன், பாரதி காலமும் கருத்தும், பக். 47
9. செல்லம்மா பாரதி, பாரதியார் சரித்திரம், 1946, பக். 24

10.11.1904 வரை தமிழாசிரியராகப் பணியாற்றிய பாரதி, பின்னர் அங்கிருந்தும் விலகினார்.

## சுதேசமித்திரனில் துணையாசிரியர்

அப்பொழுது சென்னையில் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய அய்யர் சுதேசமித்திரன் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். பாரதியார் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதை அறிந்த பாரதியின் மாமா லெட்சுமண அய்யர் என்பார் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய ஐயரிடம் பாரதியாருக்கு ஒரு வேலை அளிக்குமாறு கேட்கவே, அய்யரும் ஒப்புக்கொண்டார். அது முதல் பாரதியார் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உதவியாசிரியானார். [10]

ஆங்கிலேயர்களால் தொழில் முயற்சியில் அழிந்த தனது தந்தையின் நிலையை அடிமனத்தில் நினைத்துக் கொண்டிருந்த பாரதி, ஆங்கிலேயரை எதிர்த்திட வாய்ப்புக்கள் நிறைந்த துறையான பத்திரிகைத் துறையில் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றது எரிந்து கொண்டிருக்கிற நெருப்பினில் எண்ணை வார்த்தது போல் அமைந்து, பாரதியின் அரசியல் பிரவேசத்தை துரிதப்படுத்தியது.

## வங்கப்பிரிவினையும் சுதேசி இயக்கமும்

வங்காளத்தில் வளர்ந்து வந்த தேசிய உணர்வு அன்றைய ஆங்கிலேய ஆட்சியாளர்களிடையில் அச்சத்தை உண்டாக்கியது. அந்த இயக்கத்தை முறியடிப்பதற்காகத் திட்டம் ஒன்றைத் தீட்டிய அவர்கள் வங்காளத்தை இரண்டு மாநிலங்களாகப் பிரிப்பது என்று முடிவு செய்தனர்.

முஸ்லிம்கள் வங்காளத்தின் கிழக்கு மாவட்டங்களில் பெரும் பான்மை மக்களாக இருந்தனர். பிரிவினையினால் தோற்றுவிக்கப் படும் கிழக்கு மாநிலத்தில் தாம் ஆதிக்கம் செலுத்தலாம் என்று எண்ணி முஸ்லிம்கள் பிரிவினையை ஆதரிப்பார்கள் என்று ஆட்சியாளர்கள் கருதினர். இந்தத் திட்டத்தினால் இந்துக்களும் இரண்டாகப் பிளவுண்டு அடங்கி ஒடுங்கி விடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஒரு நிர்வாக நடவடிக்கை என்ற முறையில் வங்காளப்பிரிவினைத் திட்டம் 1905 ஜுலை 20ம் தேதி அறிவிக்கப்பட்டது; அக்டோபர் 16ஆம் தேதியன்று அத்திட்டம் அமுலாகும் என்றும் அந்த அறிவிப்பு கூறியது. பிரிட்டிஷாரின் சவாலுக்கு மக்கள் ஆத்திரத்துடன் எதிர்ப்பு தெரிவித்தனர்.

---

10. சக்தி தாஸன் சுப்பிரமணியன், பாரதி லீலை, 1938, பக் 53, 54.

## வங்கமே வாழிய...

வங்கப்பிரிவினையான அக்டோபர் 16ஆம் நாளைத் துக்கநாளாக அனுசரிக்கும் வகையில், சமைத்த உணவை யாரும் உண்ணக் கூடாதென்றும், வங்காளத்தைப் பிரிக்க முடியாது என்பதைக் காட்டும் வகையில் 'கூட்டுறவு மன்றம்' என்ற கட்டிடம் ஒன்றை கல்கத்தாவில் எழுப்புவது என்றும், அதற்கு ஆனந்த மோகன் போஸ் அடிக்கல்நாட்டுவார் என்றும் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊர்வலங்கள் நடைபெற்றன. அந்நியத்துணிகள் எரிக்கப்பட்டன.[11]

அக்காலத்தில் வங்காளத்தில் பொங்கி எழுந்த தேசிய உணர்ச்சி இந்தியத் திருநாட்டில் சுதந்திரம் வேண்டி நிற்போர் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்திழுத்தது. தேசிய உணர்ச்சிமிக்க மாணவர் கூட்டத்தினர் சென்னை கடற்கரையில் திரண்டனர். அந்த பெருங்கூட்டத்தில் பாரதி "வங்கமே வாழிய" என்ற கவிதையை முழங்கினார்.[12] அது 1905 செப்டம்பர் 15 சுதேசமித்திரனில் வெளிவந்தது.

1905 ஆம் ஆண்டில் வங்கப் பிரிவினையைத் தொடர்ந்து இந்திய நாட்டில் எழுந்த தீவிர தேசியவாத அரசியலில் முன்னணித்தலைவர்களாக திலகர், அரவிந்தர், விபின்சந்திரபாலர், லாலாலஜபதிராய் போன்றோர் திகழ்ந்தனர். இவர்களில் லோகமான்ய பாலகங்காதர திலகரைப் பாரதி பின்பற்றத் துவங்கினார். தேசபக்தச் செம்மல் வ.உ.சி., திரு.வி.க., சக்கரைச் செட்டியார், வக்கீல் துரைசாமி, டாக்டர் ஜெயராம், பத்திரிகையாளர் சி.எஸ்.ரகுநாதராவ், வணிகர் இராமசேசய்யர் போன்ற முற்போக்காளர்களின் தொடர்பும் பாரதிக்கு ஏற்பட்டது. காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை தீவிரமாக ஒப்படைத்து களத்தில் இறங்கினார் பாரதி.

## சக்கரவர்த்தினியில் பாரதியார்

1905 ஆகஸ்ட்டில் துவங்கப்பட்டு மாதந்தோறும் வெளிவந்த "சக்கரவர்த்தினி" பத்திரிகையின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றிய பாரதி, காங்கிரசின் மிதவாத, தீவிரவாத போக்குகளை கவனிக்கும் அரசியலிலும் ஆர்வத்துடன் பணியாற்றினார்.

---

11. சுசோபன் சர்க்கார், வங்காள மறுமலர்ச்சி, 1988, பக் 80-84.
12. கி. முத்துக்கிருஷ்ணன், மகாகவி பாரதியார் வாழ்க்கைச்சித்திரம், 1986, பக் 45.

## காங்கிரசில் பாரதி

கங்காநதியின் ஓரத்திலே, அழகிய ராஜகிரிக்குன்றலின் சாரலிலே மிகவும் விஸ்தாரமாக அமைக்கப்பட்ட பந்தலில் 1905 டிசம்பர் 27, 28,29,30 ஆகிய நாட்களில் காசிநகரில், காங்கிரஸ் மகாசபையின் 21வது கூட்டம் பண்டித விஷம்பரநாதர் பிரேரணை செய்ய, ராமேசசந்திரதத்தரும், ஜி.சுப்பிரமணிய அய்யரும் ஆமோதிக்க பிரபல தேசாபிமானியாகிய கோபாலகிருஷ்ணகோகலே அக்ராசனஸ்தானத்தில் அமர நடைபெறத் துவங்கியது. ஜி. சுப்பிரமணிய அய்யரின் சுதேசமித்திரன் பத்திரிகையில் துணையாசிரியராகப் பொறுப்பிலிருந்த பாரதியும், அந்தப் பத்திரிகையாளர் என்ற முறையில் காங்கிரஸ் மகாசபைக்கு தனது பத்திரிகையின் ஆசிரியருடன் கலந்து கொண்டார்.[13]

1905ல் கயா காங்கிரசில் சுதேசமித்திரன் செய்தியாளர் என்ற தகுதியில் பாரதிகலந்து கொண்டார்.[14]

காசியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்று திரும்பும் வழியில் பாரதி அல்மோடாவில் சகோதரி நிவேதிதாவைச் சந்தித்தார். "ஸ்வதேசபக்தி உபதேசம் புரிந்தருளிய குரு" என்று 1905 ஆம் ஆண்டின் இறுதியில் நிவேதிதாதேவியை சந்தித்தது பற்றி பாரதியே குறிப்பிடுகிறார். அதே வேளையில் பூனாவில் லோகமான்ய பாலகங்காதர திலகரையும் சந்தித்து அரசியல் விஷயங்களை ஆலோசித்து திரும்பியவர் பாரதி.

## இந்தியா பத்திரிகையில் பாரதி

"இந்தியா" வார இதழ் மண்டயம் குடும்பத்தைச்சேர்ந்த எஸ்.என்.திருமலாச்சாரியாரால் சென்னையில் தொடங்கப்பெற்றது. அதன் முதல் இதழ் 9 மே 1906இல் வெளிவந்தது. இதற்கு கொஞ்ச காலத்திற்குப் பிறகு பாரதி அதன் நடைமுறை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.[15]

இக்காலம் தொடங்கியே தெளிவாக அரசியல் நிலைப்பாட்டை நாம் பாரதியிடம் காண்கிறோம். தேசியக்கட்சி, தீவிரவாதக்கட்சி, புதிய கட்சி என்று கூறப்படும் பிரிவினரின் கருத்துக்களை கட்டுரைகளாகவும்,

---

13. காங்கிரஸ் மகாசபை சரித்திரம், இரண்டாம் பாகம் - சென்னை சுதேசமித்திரன் லிமிடெட் வெளியீடு. 1929 , பக் 1.
14. காங்கிரஸ் நூற்றாண்டு விழா மலர் சென்னை 1985, பக் 233.
15. ஆ.இரா. வேங்கடாசலபதி, பாரதியின் கருத்துப்படங்கள்,1994 பக் 25.

கவிதைகளாகவும், வடித்துத் தந்த பாரதி முற்றிலும் அரசியல் கலைஞராக உருமாறிவிட்டார்.[16] ஆம்; பாரதி காங்கிரசிலே தீவிரவாதியாகச் செயல்படத் துவங்கிவிட்டார்.

1906, 1907, 1908ம் ஆண்டுகளில் "இந்தியா" பத்திரிகையில் பாரதி எண்ணற்ற அரசியல் கட்டுரைகளைத் தீட்டியுள்ளார். காங்கிரஸ் என்று தலைப்பிட்டே பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

## காங்கிரஸ் பற்றி பாரதி

"காங்கிரஸ் மகாசபை வருஷந்தோறும் கூடிவருவதால் பயன் ஒன்றும் கிடையாது என்று நாம் சொல்லவரவில்லை. ஆனால் அதிலிருந்து நாம் எதிர்பார்த்தபடி அத்தனை பயன் கிடைக்கவில்லையென்பதையும், எவரும் மறுக்கமாட்டார்கள். ராஜாங்க முறைமைகளில் சீர்திருத்த சம்பந்தமாக இதுவரை காங்கிரசிலிருந்து உயர்ந்த நன்மை எதுவும் கைவந்துவிடவில்லை, ஆனால் ஜன ஐக்கிய விஷயத்தில் காங்கிரஸ் பெரும் தூண்டுகோலாக இருக்கிறதென்பதை யாவரால் மறுக்க முடியும்? வருடந்தோறும் நடக்கும் காங்கிரஸ் சபைகளும், அவற்றின் காரியாதிகளைப்பற்றி விஸ்தரிப்பதற்கு வர்த்தமானப்பத்திரிகைகளும், இல்லாவிடின் நம்மவரில் பெரும்பாலாருக்கு ராஜாங்க விஷயங்களில் இப்போதிருக்கும் சொற்பசிரத்தைகூட இல்லாமல் போயிருக்கும்."[17] என்று காங்கிரஸ் குறித்து தனது கருத்தினை வெளியிட்ட பாரதி கல்கத்தாவில் கூட இருந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் தயாரானார்.

## காங்கிரஸ் பிரதிநிதி பாரதி

சென்னையில் புதிய கட்சிக்கு ஒரே பிரதிநிதியாய் இருக்கும் நமது தமிழ் பத்திரிகையின் ஆசிரியர் மேற்படி சபைக்கு அவசியம் வந்து சேர வேண்டுமென்று ஸ்ரீவிபினசந்திரபாலரும், ஸ்ரீதிலகரின் உயிர் துணையாகிய ஸ்ரீகாபர்தேயும், வற்புறுத்திக்கடிதம் எழுதியபடியால் இப்பத்திராதிபர் அங்கே செல்லுகின்றார் என்று அதுகுறித்து 22.12.1906 இந்தியா பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. அது கல்கத்தாவில் காங்கிரஸ் மஹாசபைக்கு டெலிகேட்டுகளாக பின்வரும் கனவான்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதையும் குறிப்பிடுகிறது.

---

16. முனைவர் கோ. கேசவன், பாரதியும், அரசியலும் பக் 29.
17. வி.எஸ். சுப்பிரமணியம், இளசை மணியன், பாரதிதரிசனம், முதல்பாகம், 1986, பக்.5

வி.சங்கரன், பி.ஏ. தலைமை வகித்த கூட்டத்தில் ஸ்ரீகிருஷ்ண அய்யங்காரால் பிரேரேபிக்கப்பட்டு, என். ராகவாச்சாரியால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி ஸ்ரீ எம். நரஸிம்மம், வி.நரஸிம்மம், ஆர்.ஸபாபதி ஆகியோர் டெலிகேட்டுகளாக தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சென்னை மாகாணத்திலிருந்து வக்கீல் வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் மிதவாதகோஷ்டியினரும், பாரதியார் தலைமையில் தீவிரவாத கோஷ்டியினரும், கல்கத்தா காங்கிரஸிற்குச் சென்றனர்.

## *கல்கத்தா காங்கிரஸ் 1906*

கல்கத்தாவில் பவானிபூரிலுள்ள ரஸ்ஸாரோடுக்கு சமீபத்தில் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமானபந்தலில் 1906 டிசம்பர் 26ம்தேதி 1633 பிரதிநிதிகள் விஜயம் செய்திட 22வது காங்கிரஸ்மகாசபை தாதாபாய் நவுரோஜி தலைமையில் கூடியது. "நூற்றைம்பது வருஷ காலமாய் இயற்கைக்கு மாறான அரசியலுக்கே உட்பட்டிருக்கிறோம் ஒரு நாளாவது ஆங்கிலேயர் உட்பட்டிருப்பார்களா? இங்கிலாந்தில் ஆங்கிலேயருக்கு இருப்பது போன்ற உரிமை எல்லாம் இங்கே நமக்கு இருத்தல் வேண்டும். இது மிகவும் அவசியம் இல்லாவிட்டால் பரமதரித்திரம் தொலையாது. ஒரே வார்த்தையில் சொன்னால் நமக்குச் சுயராஜ்யம் வேண்டும்'' என்று தனது தலைமை உரையில் தாதாபாய் நௌரோஜி குறிப்பிட்டார்.[18]

## *அந்நியப்பொருள் பகிஷ்கரிப்பு தீர்மானம்*

'காங்கிரசின் நாக்கு' என்று பெயர் பெற்ற விபினசந்திரபாலர் சுதேசி பொருட்களை ஆதரிப்பதோடு, விதேசிப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்து கல்கத்தா காங்கிரசில் பேசிய போது சென்னை மாகாண மிதவாதிகள் தலைவர் வி.கிருஷ்ணசாமி ஐயர் அந்நியப்பொருள்களைப் பகிஷ்கரிப்பதை உங்கள் வங்க மாகாணத்தோடு வைத்துக்கொள்ளுங்கள். சென்னை மாகாணத்தவரிலே ஒருவர் கூட அதைச் செய்யமாட்டார் என்று ஆவேசத்துடன் கூறினார். கல்கத்தா காங்கிரசிலே அன்னியப் பொருள் பகிஷ்காரத்தீர்மானம் முன் மொழியப்படும் முன்பு சென்னை மகாணப்பிரதிநிதிகளை தனியாக கூட்டிவைத்து அன்னியப்

---

18. எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், காங்கிரஸ் சரித்திரம், 1935, பக் 136.

பொருட்களைப் பகிஷ்கரிக்கும் தீர்மானத்தை எதிர்க்க வேண்டுமென்று ஐயர் கூறினார். அதனை பாரதியார் எதிர்த்தார்; கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் தேசியக்கவி சி.சுப்பிரமணிய பாரதியார் ஐயரின் கருத்தை ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்தார்.[19]

கல்கத்தா காங்கிரசிலிருந்து சென்னை திரும்பிய பாரதி, தனது இந்தியா பத்திரிகையில் ' வங்காளிகளால் செய்யக்கூடிய காரியம் சென்னையார்களால் ஏன் செய்ய முடியாது? இவர்களும் இந்தியர்களே என்பதில் சந்தேகமுண்டா? அல்லது இவர்களுக்குத் தேசாபிமானம் இல்லையா?' என்று ஆவேசத்துடன் எழுதினார்.

## *பாலபாரத சங்கம்*

பாரதியார், சர்க்கரைச்செட்டியார், சுரேந்திரநாத் ஆர்யா, ஹரிஹர சர்வோத்தமராவ், மண்டயம் சீனிவாசன், ஆகியோரின் ஒத்துழைப்புடன் அன்னியப் பொருள் புறக்கணிப்பு, சுதேசியம் ஆகியவற்றை பிரச்சாரம் செய்யும் நோக்கத்துடன் பாலபாரத சங்கம் சென்னையில் அமைக்கப்பட்டது.[20] இச்சங்கத்தில் இளைஞர்களும் மாணவர்களும் மிகுதியாக இருந்தனர்.

பஞ்சாபி பத்திரிகையை ஆங்கில அரசு ஒடுக்கியதற்காக பாலபாரத சங்கத்தின் சார்பில் நடத்திய கண்டனக்கூட்டத்தில் 23.2.1907ல் சென்னையில் பாரதி பேசினார். இது தொடர்பாக ஜி.சுப்பிரமணியய்யர் தலைமையில் 27.2.1907ல் நடந்த கூட்டத்திலும் பாரதி பேசினார். 17.3.1907ல் பாலபாரதசங்க கூட்டத்திலும் பாரதி உரையாற்றினார்.

சென்னை வக்கீல்களும், மிதவாதிகளும், பாரதி கோஷ்டியுடன் சேராமல் பத்திரமாய் விலகியிருந்தனர். அச்சமயம் விபினசந்திரபாலர் பிரசங்கம் செய்ய பெஜவாடாவிற்கு வந்திருந்தார். அதையறிந்த சென்னை தீவிரவாதிகள் தங்கள் சார்பாக பாரதியாரை பெஜவாடாவிற்கு அனுப்பி பாலரை அழைத்துவரச் செய்தனர்.[21] பாலர் சென்னை வந்து அமிதவாதக் கொள்கைகளை விவரித்து அநேக அருமையான பிரசங்கங்களை நிகழ்த்தினார்.

---

19. ம.பொ. சிவஞானம், விடுதலைப் போரில் தமிழகம், முதல் தொகுதி, 1982, பக் 177.
20. சீனி. விசுவநாதன், மகாகவி பாரதி சில புதிய உண்மைகள், 1984, பக் 98.
21. ஆக்கூர் அனந்தாச்சாரி, கவிச்சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதி சரிதம், 1936, பக் 24.

*விபின சந்திரபாலர்*

சில்ஹட் நகரத்தில் காயஸ்த வமிசத்திலே தோன்றிய விபினசந்திரபாலர் கட்டக் நகரத்தில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். பின்னர் அதிலிருந்து விலகி காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்தார். மிகச்சிறந்த முறையில் பேசிடும் ஆற்றலைப்பெற்ற அவர் வங்காளி, வந்தேமாதரம் என்கிற ஆங்கிலப்பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதி வந்தார். ஆந்திரபிரதேசம் விஜயநகரம், காக்கினாடா, ராஜமகேந்திரம் ஆகிய பிரதான ஊர்களில் பேசிவிட்டு 1907 மே 1ல் சென்னை வந்தார். சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், விக்டோரியா நகர மண்டபத்திலும் நடந்த பொதுக் கூட்டங்களில் பேசினார். மாணவர்களும், வக்கீல்களும் அவரிடம் பெரிதும் கவர்ச்சி அடைந்தனர். அவருடைய பேச்சுக்கள் சென்னை நகரில் காங்கிரஸ் தீவிரவாதக்கட்சியினருக்கு ஆதரவைப் பெருக்கியது. பாலர் கூட்டங்களுக்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும், அவருடைய தோழர்களுமான தீவிரவாதிகள் தான் ஏற்பாடு செய்திருந்தனர்.

விபின சந்திரபாலர் சென்னைக்கூட்டங்களில் கலந்து கொண்டிருந்த வேளை பாஞ்சாலத்தில் லாலாலஜபதிராய் கைது செய்யப்பட்டார். அந்தச் செய்தி கிடைத்ததும், பாலர் தமிழ்நாட்டுச் சுற்றுப் பயணத்தை (1907 - மே. 1, 2, 3, 4, 5, 7, 9) சென்னை நகர அளவில் முடித்துத் திருப்பினார்.[22]

விபினசந்திரபாலரின் பேச்சைக்கேட்டவர்கள் உணர்ச்சி பெற்று எழுச்சிகொண்டு தாங்கள் அனிந்திருந்த ஆங்கிலநாட்டுத் தொப்பிகளைத் தூர எறிந்து தீயிட்டுக் கொளுத்தினார்கள்.[23] "இந்த பெங்காளிப்பாதகன் வந்து சென்னைவாசிகளையெல்லாம் ராஜத்துரோகிகளாக்கிவிட்டான்; இவனைக் கனநேரம் கவர்ன்மென்டார் சும்மா விட்டு வைக்கக்கூடாது; இவன் ராஜதுரோகி; இவனை உடனே ஜெயிலுக்குள்ளேனும் அந்தமான் தீவுக்கேனும் அனுப்பிவிடவேண்டும்" என்று அரசு ஆதரவு ஏடான சென்னை டைம்ஸ் அப்போது எழுதியது.

## நெருப்புக் கனலைக்கக்கிய "இந்தியா"

"ஆயிரம் நாய் குலைத்தாலும் சூரியன் தன் ஒளிமங்குமா? விபின சந்திரபாலர் தமது திவ்விய உபந்நியாசங்களால் ஜனங்களின் நெஞ்சைக் கவர்ந்து கொண்டுவிட்டார். பாலர் என்றால் ஸம்ரட்சகர் என்று அர்த்தம். இப்பெயர் இம்மகானுக்கே தகும்''[24] என்று 11.4.1907 இந்தியா-பத்திரிகையில்

22. Shams - ul - Akbhar, News Paper Report, Conf. 1907, P 148.
23. CID Report May - Nov. 1907, P 22.
24. பாரதி தரிசனம், பாகம் 2, பக் 88.

மேற்சொன்ன தாக்குதல்களுக்கு மறுப்பளித்து பாரதி எழுதியுள்ளார்.

விபினசந்திரபாலர் சென்னையில் சில இரகசிய அறைக் கூட்டங்களையும் நடத்தினார். இவற்றில் பாரதியும், மண்டயம் சீனிவாசனும் முதலில் கலந்து கொண்டனர். இரண்டாம் சுற்றுக்கூட்டத்தில் ஆர்யா, சக்கரை, நீலகண்டன், துரைசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். முதல் சுற்றுக்கூட்டத்தில் கலந்து கொள்கின்ற அளவுக்கு அரசியல் முக்கியத்துவம் பாரதி பெற்றிருந்தார் .

## கண்டன ஊர்வலங்கள்

பாலபாரத சங்கத்தின் சார்பில் 14.9.1907 சுதேசிய ஊர்வலம் நடத்தப்பட்டது. மூர்ச்சந்தையிலிருந்து கடற்கரை வரை நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் 1500 பேர்கள் கலந்துகொண்டனர்.

12.9.1907 இல் விபினசந்திரபாலரைக் கைது செய்ததைக் கண்டித்தும் நடத்தப்பட்ட கண்டன ஊர்வலத்தில் கைவினைஞர்களும், சிறுகடைக் காரர்களும், பெருமளவில் கலந்து கொண்டனர். ஊர்வலங்களின் முடிவில் நடத்தப்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டு பாரதி உரையாற்றினார். 1907 சூரத் காங்கிரசுக்குப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்திட சென்னை கடற்கரையில் பாலபாரத சங்கத்தின் சார்பில் கூட்டம் ஏற்பாடானது.

## கடற்கரைக் கூட்டம்

6.10.1907ல் சென்னை கடற்கரையில் பாலபாரத சங்கத்தின் சார்பில் காங்கிரஸ் மாநாட்டிற்கு பிரிதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் கூட்டம் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. தலைமையில் நடைபெற்றது.

சூரத் காங்கிரசில் தீர்மானங்களை வலியுறுத்திப் பேச கே.வெங்கடரமணராவ், சி. சுப்பிரமணியபாரதி, வீரத்தலைவர் வ.உ.சிதம்பரம்பிள்ளை, சி. செல்வராஜ் முதலியார், சக்கரை செட்டியார் ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. கூட்டத்தில் இதற்கான தீர்மானத்தை வ.உ.சி அவர்களே முன்மொழிந்தார்கள். அவையில் இருந்த சிலர் ஜி.சுப்பிரமணிய ஐயர் பெயரும் அதில் சேர்க்கப்படவேண்டும் எனக் குரல் கொடுத்தனர். இந்தச் சமயத்தில் பாரதியார் எழுந்து நின்று அதற்குஎதிர்ப்பு தெரிவித்தார். முன்பு ஒரு கூட்டத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியர்கள் சுயராஜ்யம் அடைய வேண்டும் என சுப்பிரமணிய ஐயர் பேசியதைச் சுட்டிக்காட்டிய பாரதியார் ஜி.சுப்பிரமணிய ஐயரின் பெயர், நேஷனலிஸ்ட் பட்டியலில் இடம் பெறக்கூடாது என்று கூறினார்.[25]

---

25. பெ.சு.மணி, புதிய விழிப்பின் முன்னோடி ஜி.சுப்பிரமணிய ஐயர், 1987 பக்.55.

7.12.1907இல் பாரதி தலைமையில் சென்னையில் கூட்டப்பட்ட கூட்டத்தில் வ.உ.சி.சுதேசியம் குறித்துப் பேசினார்.

8.12.1907 இல் சூரத் மாநாட்டு வேலைகள் தொடர்பாக திருவல்லிக்கேணி நாடக மன்றத்தில் ஏற்பாடு செய்து கூட்டத்தில் சூரத் மாநாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி பாரதி உரையாற்றினார்.

மாநாட்டுப் பிரதிநிதிகளின் பயணச்செலவை மண்டயம் சீனிவாசனும், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யும் ஏற்குமாறு செய்து மாநாட்டுப் பணிகளை தீவிரமாகச் செய்தவர் பாரதி .

## சூரத் காங்கிரஸ் 1907

சூரத்தில் தபதி நதிக்கரையில் விஸ்தாரமான பந்தலில் இருபத்து மூன்றாவது காங்கிரஸ் மகாசபை 1907 டிசம்பர் 26ஆம் தேதிபகல் இரண்டரை மணிக்கு கூடியது. 1400 பிரதிநிதிகள் அப்போது விஜயம் செய்திருந்தனர்.

ஸ்ரீஐத் திரிபுவனதாஸ் மால்வி வந்திருந்தோரை வரவேற்று உரையாற்றினர். அம்பாலால் தேசாய் எழுந்து காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு பாபுராஷ்விகாரி கோஷின் பெயரை முன்மொழிந்தார். கூட்டத்தில் 'கூடாது கூடாது' என்ற ஆரவாரம் எழுந்தது; குழப்பம் ஏற்பட்டது; கூட்டம் மறுநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

1907 டிசம்பர் 27 பகல் 1 மணிக்கு காங்கிரஸ் மகாசபை மீண்டும் சூரத்தில் கூடியது. ராஷ்விகாரிகோஷ் ஊர்வலமாக பந்தலுக்கு அழைத்துவரப்பட்டார். இந்த வேளையில் காங்கிரஸ் தொண்டர் ஒருவர் வந்து, திலகர் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை திருபுவனதாஸ்மால்வியின் கையில் கொடுத்தார்.

## திலகரின் திருத்தப் பிரேரணை

அக்ராசனர் பிரேரேபணையை ஆமோதித்து பாபு பானர்ஜி பேசி முடிந்தவுடன், காங்கிரஸ் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்றும், தான் கொண்டுவரப்போகும் திருத்தப் பிரேரணை ஒன்றை அனுமதிக்க வேண்டுமென்றும் திலகரால் அதில் கோரப்பட்டிருந்தது.

சுரேந்திரநாத் பானர்ஜி தனது பிரசங்கத்தை முதல்நாள் நிறுத்தின இடத்திலிருந்து துவங்கிப் பேசி முடித்தார். பண்டித மோதிலால் நேரு அக்ராசனப் பிரேரேபணையை ஆதரிக்க எழுந்து பேசி முடித்ததும்

வாக்கெடுப்பில் அது வெற்றி பெற்றது. பிரேரேபணை நிறைவேறி விட்டதாக அறிவிக்கப்பட்டது; ராஷ்விகாரிகோஷ் தலைமை ஆசனத்தில் அமர்ந்து தனது தலைமை உரையைத் துவங்கும் முன், திலகர் மேடையிலே தோன்றினார். தனது திருத்தப் பிரேரணையை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார். சூரத்தில் மிதவாதிகளும் திலகரின் தலைமையிலான தீவிரவாதிகளும் மோதினர்; செருப்புக்கள் பறந்தன; நாற்காலிகள் மட்டுமின்றி காங்கிரசும் உடைந்தது.[26] இந்த சூரத் காங்கிரசில் கலந்து கொள்ளத்தான் 1907 டிசம்பர் 21ஆம் தேதி சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து தஞ்சாவூர் கே.ராமஸாமிஅய்யர், தூத்துக்குடி வ.உ.சிதம்பரம்பிள்ளை சென்னைப் பட்டணத்திலிருந்து ஸ்ரீசக்கரைச் செட்டியார், ஸ்ரீதுரைசாமி அய்யர், ஸ்ரீசங்கரநாராயணய்யர், ஸ்ரீவெங்கட ரமணராவ், ஸ்ரீயதிராஜ் சுரேந்திரநாத், திருவல்லிக்கேணியிலிருந்து சில பிரபுக்கள், வெளியூர் கணவான்கள் ஆகியோருடன் சூரத் காங்கிரசிற்கு புறப்பட்டதை பாரதி தெரிவித்திருக்கிறார்.[27]

## *கலாட்டா காங்கிரஸ்*

சூரத்தை சென்றடைந்ததும், 1907 டிசம்பர் 24,25ம் தேதிகளில் தனியாக சுதேசிய சங்கம் (நாஷனலிஸ்ட் கான்பரன்ஸ்) நடைபெற்றது. இரண்டு தினங்களிலும் ஸ்ரீஅரவிந்தகோஷ் (வந்தேமாதரம் பத்திராதிபர்) அக்கிராசனம் (தலைமை) வகித்தார். ஸ்ரீமான் திலகர் உபந்நியாசம் செய்தார். காங்கிரஸ் சபை கூடப் போவதன் காரியங்கள் இன்னின்ன என்பதை திலகர் விஸ்தரித்துக் கூறினார். அந்தக் கூட்டங்களில் பாரதி கலந்து கொண்டார். அதன்பின் டிசம்பர் 26ம் தேதி குழப்பத்துடன் சூரத் காங்கிரஸ் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

26ம் தேதி காங்கிரஸ் சபை கலைந்த மாலையில் சென்னை பிரதிநிதிகளின் கூட்டம் ஜி. சுப்பிரமணியஐயர் தலைமையில் நடைபெற்றது. அதிலே கலந்துகொண்ட பாரதி "இன்று மாலை நடந்த புதுக்கட்சியார் சங்கத்திலே ஸ்ரீதிலகரும் மற்ற தலைவர்களும் சொல்லிய விஷயங்களை என் மித்திரர் ஒருவர் வந்து என்னிடம் இப்போது தெரிவித்தார். அதை உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். இன்று பகலில் நடந்த அசம்பாவிதமான

---

26. செ. திவான், விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள், 1994, பக் 83.

27. ரா. அ. பத்மநாபன், பாரதி புதையல் பெருந்திரட்டு 1982, பாரதியின் எங்கள் காங்கிரஸ் யாத்திரை, பக் 511.

காரியத்திற்கு யார் ஜவாப்தாரியாக இருந்த போதிலும், நாளை முதல் காங்கிரஸ் முடியும் வரை இம்மாதிரியான சம்பவம் நிகழ்வதற்குப் புதிய கட்சியைச்சேர்ந்த எந்தப் பிரதிநிதியும் இடம் கொடுக்கலாகாதென்று எங்கள் கட்சியாருக்கு திலகர் சொல்லியிருக்கிறார். ஐக்கியமே பலம். நிதானக் கட்சியாரும், நமது கட்சியாரும் சேர்ந்து பாடுபட்டால் தான் நமது தேச நன்மைக்கு விரைவாக ஹேதுவேற்படும்.

## ஒற்றுமைக் குரலை ஓங்கி ஒலித்த கவிஞன்

நமது கட்சியாரைக் காங்கிரசிலிருந்து பிரித்து விடுவதற்கு அவர்கள் பலவிதமாக முயற்சி புரிந்து வருகிறார்கள். அதற்கு என்ன வியாஜம் ஏற்படப் போகிறதென்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் ஏமாந்து போய் ஓர் வியாஜமேற்படுத்தி கொடுத்துவிடலாகாது. இன்று நடந்த குழப்பத்திற்கு நமது கட்சியார் முகாந்திரமில்லை யென்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் அவர்கள், நமது கட்சியாரைத் தான் குற்றம் சொல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை ஆகையால் நாளைக்கு சுரேந்திரநாதராகட்டும், அல்லது வேறெந்த நிதானஸ்தர்களாகட்டும், நம்மைப் பற்றி என்ன சொல்லிய போதிலும் நீங்களெல்லாம், வாய் திறவாமல் மவுனமாகக் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும் அவர்களுடைய பிரசங்கத்திற்கு எவ்விதமான தடையும் செய்யக்கூடாது என்று திலகர் வற்புறுத்தியிருக்கிறார். ஆதலால் இனிமேலும் நம்மிருகட்சியருள் ஒற்றுமையாக நயத்தில் காரியம் நடக்க வேண்டும் என்பதே திலகரும் அவரைப் பின்பற்றுவோர்களும் கொண்டிருக்கும் நோக்கமென்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று பிரார்த்தனை செய்கிறேன். காங்கிரஸ் சமயத்தில் நம்மவர்கள் இரைந்து மூச்சுக்கூட விடுவதில்லை யென்று மவுன விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உங்களுக்கு திருப்தி விளைவிக்குமென்று நம்புகிறேன்" என்று பாரதி பேசினார்.[28]

காங்கிரசின் ஒற்றுமைக்கு பாரதி குரல் கொடுத்தது இதன் மூலம் தெளிவாகிறது. ஆனால் காங்கிரசின் வரலாற்றில் நீங்காவடுவாக காங்கிரஸ் அப்போது உடைந்து போயிற்று.

மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் முடிவான பிரிவினை உண்டாக்கிய சூரத் காங்கிரசிலிருந்து திரும்பிய பாரதியார் திலகரின் புதிய கட்சியை ஆதரித்து தீவிர பிரச்சாரம் செய்து வந்தார். 1907இல் திலகர்

28. முன்னர் கூறிய நூல், பக்.528.

செய்ததோர் பிரசங்கத்தை ஸ்ரீமத் பாலகங்காதரதிலகர் செய்த அருமையான உபந்நியாசத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு என்று THE TENETS OF THE NEW PARTY என்று வெளியிட்டார் பாரதி .[29]

## *மிதவாதிகளைப் பற்றி பாரதி*

"பெயருக்கு ஒரு கட்சி வேண்டுமென்ற நோக்கத்தோடும், பழைய கட்சி மிகவும் சௌகரியமாயிருப்பதாலும் இவர்கள் பழைய கட்சி தான் சரியென்று வாய்ப்பறையடிக்கிறார்கள். **கோயிற் சொத்தை கொள்ளையடிப் பதற்காக தரும கர்த்தா வேலை பார்ப்பது போலவும், ஸப் ஜட்ஜ் வேலை வாங்குவதற்காக சட்டசபை மெம்பர் ஆவது போலவும், சாப்பாட்டுக்கு வழியில்லாமல் சந்நியாசம் பெறுவதைப் போலவும், சென்னைவாசிகள் பலர் தத்தம் சொந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்காகவே பொது ஜனபிரதி நிதிகளென்றும் ஜனத் தலைவர்களென்றும் பற்பல போலி நாமங்கள் ஆடி உலாவுகின்றனர்.** இவர்கள் நடந்து கொள்ளும் விதங்களை உற்று நோக்கினால் இவர்களது யோக்கியதைகள் பட்டப்பகல் போல் விளங்கி விடும். காங்கிரஸ் சபையில் தலையை யாட்டியும், கையை நீட்டியும் பேசிவிட்டு அந்த மார்க்கமாகவே ஸ்தல தரிசனங்கள் செய்துவிட்டு சென்னைக்கு திரும்பும் இவர்கள் அடுத்த வருஷம் டிசம்பரில் தான் காங்கிரஸைப் பற்றி நினைப்பார்கள். காங்கிரஸில் செய்யப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் நடக்க வேண்டுமென்ற எண்ணம் இவர்களுக்குச் சிறிதும் கிடையாது'' என்று மிதவாதிகளைப் பற்றி கடுமையாகவே பாரதி குறிப்பிடுகிறார். [30] திலகரின் தீவிரவழியில் பாரதி தீவிர காங்கிரஸ் வாதியாக செயல்பட்டார்.

## *சென்னை ஜனசங்கம்*

*1907* இல் சூரத்தில் காங்கிரஸ் பிளவடைந்ததற்குப் பின்னர் தேசியவாதிகள் கூட்டத்தில் பாரதி கலந்து கொண்டார். அக்கூட்டத்தில்

---

29. முன்னர் கூறிய நூல், பக். 536 - 549

30. இளசை மணியன், பாரதி தரிசனம், பாகம் 2, பாரதியின் இந்தியா பத்திரிகைக் கட்டுரைகள், 1907 ஆம் ஆண்டு முற்பகுதியில் வெளிவந்தவை, 1977, பக் 24.

சென்னை மாகாணப் புதிய கட்சியின் செயலாளராக வ.உ.சி. தேர்ந்தெடுக்கப்பட்டார். வ.உ.சி.யின் முயற்சியில் சென்னை திருவல்லிக்கேணி கங்கைகொண்டான் மண்டபத்தில் 11.1.1908ல் 'சென்னை ஜனசங்கம்' துவங்கப்பட்டது.

தஞ்சைக் கல்லூரி வடமொழி அறிஞர் வரதராஜ சர்மா தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் சங்கத்தின் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க நியமிக்கப்பட்ட எழுவர் குழுவில் பாரதியும் ஒருவராகப் பணியாற்றினார்.

இந்த சங்கம் தொடங்கப்பட்ட பிறகு சென்னை நகரில் பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் அதிகமாயின. மூர்ச்சந்தையிலும் திடீர் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெற்றன. இவற்றில் கலந்து கொண்டு சுரேந்திரநாத் ஆர்யாவும், பாரதியும் பேசினார்கள்.

## சுதேசிவஸ்து பிரச்சாரினி சபா

மேலும் 'சுதேசி வஸ்து பிரச்சாரினி சபா' சார்பாக நடத்தப்பட்ட பல கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும், ஆர்யாவும், பாரதியும் பேசினர். பாரதி கவிதைகள் பாடினார். **இந்தக் கூட்டங்களில் லஜபதிராய், திலகர், அரவிந்தர், வ.உ.சி. ஆகியோரது படங்கள் விற்கப்பட்டன.** பாரதியின் கவிதைகளும் பேச்சுக்களும் உடனுக்குடன் மொழி பெயர்க்கப்பட்டு சென்னை மாகாணத் தலைமைச்செயலருக்கு அனுப்பப்பட்டது. பாரதி, ஆர்யா ஆகியோரது பேச்சுக்களில் மக்களைத் தூண்டிவிடுவதற்கான ஆதாரங்கள் போதுமானவை யாக இருப்பின் அவர்களை கைது செய்யலாம் என்று தலைமைச் செயலாளர் அப்போது பதில் எழுதினார்.

## தொடர் கூட்டங்கள்

தூத்துக்குடியில் வ.உ.சியின் அழைப்பின் பேரில் 2-2-1908ல் 2000 பேர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பாரதி பேசினார். காஞ்சிபுரத்திலும் ஒரு கூட்டத்தில் அந்த கால கூட்டத்தில் பாரதியார் பேசினார்.

தூத்துக்குடியில் ஜனசங்கம் அமைக்கப்பட்டதற்கு வாழ்த்துச் செய்தியை பாரதி அனுப்பினார்.

## தடையை மீறிய பாரதி

9.3.1908 அன்று விபினசந்திரபாலரின் விடுதலையைக் கொண்டாட

போலீஸ் இசைவுடன் ஊர்வலமும், கூட்டமும் நடத்தப்பட்டது. ஆனால் வாணவேடிக்கைக்கும் இசை நிகழ்ச்சிக்கும், அனுமதி மறுக்கப்பட்டது. திருவல்லிக்கேணி விக்டோரியா விடுதிக்கு அருகில் வந்தவுடன், கூட்டத்தில் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

'விபின சந்திரபாலரின் விடுதலை என்பது சுதந்திரப் போராட்டத் தீரர்களுக்குத் திருவிழாவைப் போன்றதாகும். அந்த விழாவில் இசை நிகழ்ச்சி நடத்துதல் இயல்பு. இந்த இயல்பு சட்டத்தால் மறுக்கப்படுமானால் அதை மீற வேண்டுமென்பது' பாரதியின் கருத்தாக இருந்தது. எனவே, தடையை மீறி நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சியை ஆதரித்து கூட்ட முடிவில் பாரதி பேசினார்.

*1908*- ஏப்ரலில் காவல்துறையினரைத் தாக்கியதற்காக சிறை சென்று விடுதலையான இலட்சுமணய்யாவைப் பாராட்டி சென்னை ஜனசங்கம் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பாரதி பதக்கமும் வழங்கினார்.

## திருவல்லிக்கேணி விளையாட்டுக்கழகம்

பச்சையப்பன் கல்லூரி, கிறிஸ்தவக்கல்லூரி, மாநிலக்கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களையும் இளைஞர்களையும் அழைத்து வந்து இருட்டுகிற நேரம் வரை கடற்கரையில் விளையாடிக்கொண்டிருப்பார்கள். அதன்பின்னர் பாரதி அவர்களுக்கு அரசியல் கல்வியினைப் போதிப்பார். போலீசாரின் கண்களில் மண்ணைத்தூவி இளைஞர்களை நாட்டு விடுதலைக்கு தயார் படுத்திட பாரதி இந்த வழியைக் கடைப்பிடித்தார்.[31]

சுதேசி சாமான்கள் மட்டும் விற்பதற்கு ஒருகடையை ஆரம்பித்தவர் பாரதியார்.[32]

## கிருஷ்ணசாமி ஐயர்

பாரதியார் கிருஷ்ணசாமி ஐயரைச் சந்தித்து தாம் இயற்றிய தேசிய பாடல்கள் சிலவற்றைப் பாடிக்காட்டுவது வழக்கம். இவற்றைக்கேட்டு பரவசமெய்திய கிருஷ்ணசாமி அய்யர் இந்தப் பாடல்களை அச்சிட்டு இனாமாக வழங்க ஏற்பாடு செய்தார். இதற்குப்பிறகு "ஸ்வதேசகீதங்கள்" என்ற பெயரில் ஒரு தனி நூல் வெளியாயிற்று. இதுவே முதன் முதலாக வெளிவந்த பாரதியாரின் நூல் ஆகும்.[33]

---

31. முனைவர் கோ. கேசவன், பாரதியும், அரசியலும், பக். 81
32. வெ. சாமிநாத சர்மா, நான்கண்ட நால்வர், 1959. பக். 251.
33. மேலது.

## வ.உ.சியை வாழ்த்திய பாரதி

தெற்கே தூத்துக்குடியில் சுதேசி எழுச்சி, சுதேசி நீராவிக்கப்பல் கம்பெனியைத் துவக்கி, வ.உ.சிதம்பரம்பிள்ளை தனிப்பெருந்தலைவராகத் திகழ்ந்து கொண்டிருந்தார். அவரது அரசியல் ஆர்வத்திற்கு பாரதியே மூலவித்தாக அமைந்தார்.

'பெரும்பாலும் பாரதியாரும், நானும் சிறிதுநேரம் தேச காரியங்களைப்பற்றிப்பேசிக் கொண்டிருந்தோம். அப்பேச்சு அவரை கம்பராகவும், என்னைச்சோழனாகவும், நினைக்கும்படி செய்தது. நால்வரும் மாலை 5 மணிக்கு திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் சென்றோம் அங்கிருந்து வங்காளத்தின் காரியங்களையும், பெபின் சந்திரபாலர் முதலியோரின் பிரசங்கங்களையும், செயல்களையும், பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். என் உள்ளத்தில் மின் மினிப் பூச்சிப் போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்கு போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது' என்று வ.உ.சி.யே பாரதியைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.[34]

*1908 மார்ச் 12ம்* நாள் நெல்லையில் வ.உ.சியும் சுப்பிரமணிய சிவாவும் ஆங்கிலேயே ஆட்சியின் அடக்குமுறைச் சட்டத்தால் கைது செய்யப்பட்ட போது நெல்லையில் பேரெழுச்சி ஏற்பட்டது; துப்பாக்கிச்சூடுகள் நடைபெற்றன. அப்போது இந்தியா பத்திரிகையின் பார்வையாளராக நெல்லைக்கு வந்தார் பாரதி. *1908* ஏப்ரல் *27*இல் பாளையங்கோட்டை சிறைச்சாலைக்குச் சென்று தேசபக்த செம்மல்களைக் கண்டுபேசினார். வ.உ.சிக்கு வாழ்த்து தெரிவித்தார். நெல்லை செசன்ஸ் நீதிமன்றத்தில் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு வ.உ.சி. கொடுந்தண்டனை பெற்றார்; அதன்பின்னர் பாரதியும் அரசின் கெடுபிடிகளில் அகப்படாமல் புதுவைக்கு தப்பிச்சென்றார்.

## 1908 - 1918

இக்கால கட்டத்தில் நாட்டில் என்னென்னவெல்லாமோ நடந்து விட்டன. மக்களுக்கு நல்வழிகாட்டக்கூடிய தீவிரவாதப் பெருந்தலைவர்கள் சிறையிலே அடைபட்டு கிடந்தனர்.

நெல்லை ஆக்டிங் கலெக்டர் ஆஷ் வீரவாஞ்சி அய்யரால் மணியாச்சியில் *17.6.1911*இல் சுட்டுக்கொல்லப்பட்டார். *15.9.1911*ல் பாரதி

34. வி.ஓ.சி. கண்ட பாரதி, வ.உ.சி. எழுதி, வ.உ.சி. சுப்பிரமணியம் தொகுத்தது, 1946, சென்னை, பக் 7.

மீது கைது ஆணை பிறப்பிக்கப்பட்டது. பாரதியை பிடித்துக்கொடுத்தால் 1000 ரூபாய் பரிசு என்றும் அறிவிக்கப்பட்டது. பாண்டிச்சேரியில் பாரதி அடைக்கலம் புகுந்தார். பாரதியின் பாண்டிச்சேரி வாழ்க்கையைப் பற்றி மட்டும் எழுவது என்றால் அதுவே ஒரு தனி சரித்திரமாகும். (எத்தனையோ, அறிஞர்கள் அதுகுறித்து தனிநூல்கள் எழுதியுள்ளனர்.)

## புதுவையில் பாரதி

பாண்டிச்சேரியில் இருந்த பாரதியார் எண்ணற்ற கவிதைகளை அப்போது எழுதிவந்தார். அவ்வப்போது பத்திரிகைகளுக்கும், அரசியல் கருத்துக்களை எழுதி அனுப்பினார்.

3.9.1914 இந்துப் பத்திரிகையில் திலகரின் கருத்தை ஆதரித்து மடல் தீட்டிய பாரதி தன்னாட்சியை விரும்புகிறோம். அகிம்சைக்கு ஆதரவு தருகிறோம் என்று அதில் குறிப்பிட்டார்.[35]

அரசியல் வானில் சோர்வுற்றிருந்த பாரதி இலக்கிய வானிலே ஜொலித்துக் கொண்டிருந்தார். அந்த காலக்கட்டத்தில் வ.உ.சியும் திலகரும், சிறையில் இருந்து விடுதலை ஆகிவந்தனர். தென்னாப்பிரிக்காவில் இருந்து அண்ணல் காந்தியடிகளும் இந்தியாவிற்கு திரும்பினார். 1915ம் ஆண்டு முதல் காங்கிரஸ் மகாசபை கூட்டங்களிலும் கலந்து கொள்ள ஆரம்பித்தார்.

## பிரிட்டிஷ் பிரெஞ்சு ஒப்பந்தம்

முதல் உலகப்போர் முடிவுற்றது. அந்தவேளையில் பிரெஞ்சு இந்தியப் பகுதிகளில் உள்ள அரசியல் கிளர்ச்சியாளர்கள் குறித்துப் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையில் 26.4.1918இல் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி பிரிட்டிஷ் இந்திய அரசின் நலன்களுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய அரசியல்வாதிகள் பிரெஞ்சு இந்தியப்பகுதிகளில் அடைக்கலம் புகுந்துள்ளனரென பிரிட்டிஷ் இந்திய அரசு எடுத்துக் கூறினால் அவர்களை உடனடியாகப் பிடித்து பிரிட்டிஷ் இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது.[36]

---

35. A hundred years of the Hindu the Epic story of Indian Nationalism, p. 227.
36. கோ. கேசவன், பாரதியும் அரசியலும், பக் 128.

இந்தக்காலத்தில் தான் பாரதி புதுவையிலிருந்து வெளியேற முடிவெடுத்தார். இதுகுறித்து சுதேசமித்திரன் உரிமையாளர் ஏ. ரங்கசாமி அய்யங்காருக்கு எழுதிக் கேட்டார் பாரதியார். வெளியே வருவதற்கு தக்க காலம் அதுதான் என்று ரங்கசாமி அய்யங்கார் பாரதியாருக்கு யோசனை சொன்னார்.[37]

## புதுவையிலிருந்து வெளியேறல்

20.11.1918 அதிகாலையில் பாரதியார் தன்மனைவி, மைத்துனர் ஆகியோருடன் புதுவை எல்லையைக் கடந்து வரும்போது, திருப்பாதிரிப் புலியூரில் அன்றைய சென்னை மாகாணப் போலீஸ் பாரதியை மட்டும் கைது செய்து கடலூர் துணைநீதிபதி முன் ஆஜர்படுத்தினர். ஜாமீன் விடுதலை அவருக்கு மறுக்கப்பட்டது. 24.11.1918இல் சிதம்பரம் முகாமிற்கு வந்த மாவட்ட நீதிபதியிடம் (கலெக்டர்) பாரதியைக் கொண்டு சென்றனர்.

## கடலூர் சிறையில் கவிஞர்

1914 ஆம் ஆண்டு இந்திய நுழைவுத் தடைச் சட்டத்தின் கீழ் (Ingrees into India Act) பாரதி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஜாமீன் விடுதலை இங்கும் மறுக்கப்பட்டது. 15 நாட்கள் காவலில் வைக்க ஆணையிடப்பட்ட பாரதி கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

## ஆளுநர் பெட்லண்டுக்கு எழுதிய கடிதம்

அரசியலின் அனைத்துச் செயல்களிலிருந்து விடுபட்டு விடுவதாகவும், பிரிட்டிஷ் அரசுக்கு நம்பிக்கையாகவும், சட்டத்தின்படி இயங்கும் குடிமகனாகவும் எப்பொழுதும் இருக்கப் போவதாக 10.12.1918இல் பாரதி ஆளுநர் பெட்லண்டுக்கு கடலூர் சிறையிலிருந்து கடிதம் எழுதினார். இதோ அந்தக் கடிதம்

BHARATHY TO THE H.E. GOVERNOR OF MADRAS
OM SAKTHI

District Jail, Cuddalore,
10th December, 1918

To
His Excellency Lord Pentland
Governor of Fort St. George
Madras.

37. வ.ரா., மகாகவி பாரதியார், சென்னை, 1944, பக் 105.

The humble petition of C. Subramania Bharati (Forwarded thro' the Suptd. District Jail, Cuddalore)

May it please your excellency,

It is more than a week ever since I was arrested at Cuddalore on my way from Pondicherry to Tinnelvely which is my native district. After many loyal assurances on my part, as your Excellency may well remember, the Deputy Inspector General (C.I.D.) was sent by your Excellency's Govt. a few months back to interview me at Pondicherry. The D.I.G. after being thoroughly satisfied with my attitude towards the Govt. asked me if I would be willing to kept interned partly as a war measure, in any 2 districts of the Madras Presidency during the period of the war. I could not consent to that proposal, because, having absolutely renounced politics, I could on no reason why any restraint should be placed on my movements even while the war lasted. Subsequently to that also, ***I have addressed several petitions to your Excellency clearing away all possible doubts about my position.***

Now that the war is over and with such signal success to the allies I ventured to leave Pondicherry, honestly believing that there would be no difficulty whatsoever in the way of my settling in British India as a peaceful citizen. Contrary to my expectations, however, I have been detained and placed in the Cuddalore District Jail Under conditions which I will not weary from your Excellency by describing now at any length but which are altogether disagreeable to man of my birth and station and full of dangerous possibilities to my health.

***I once again assure your Excellency that I have renounced every form of politics, I shall even be loyal to the British govt. and law abiding.***

I, therefore, beg your Excellency to order my immediate release. May God grant Your Excellency a long and happy life.

I beg to remain<br>
Your Excellency<br>
Your's Excellency's Most obedient servant,<br>
C. Subramania Bharati,

---

JAIL SHEET

| | |
|---|---|
| Cuddalore | Place of Detention |
| C. Subrahmanya Bharati | Name |
| 36.0.0 | Age |
| Brahmin | Caste, race of National |
| Criminal | Whether in Jail Criminal or Civil |

| | |
|---|---|
| A Political agitator detained custody under the Ingress into India ordinance 1914 | Ground of Detention |
| Not fixed | Terms for which detained |
| 24-11-1918 | Date from which detained |
| 0.0.21 | Period of detention already elapsed |
| Remanded by Sub Magistrate under section 54 criminal proceedure code | Number and Date of Order of Govt. under which now detained |
| 0.4.0. per day | Allowance or cost to Govt. P/m. |
| Conduct and health good during confinement in jail was permitted to get his food from outside | Report of the conduct health and comfort of the person detained |
| Release from the DIstrict Jail on 14-12-1918 | Remarks |

- Extract from G.O. 710 - 711, Home (Judl., dept. 28-3-1919.)

CONDITIONS IMPOSED ON BHARATHY

Under secretary E.M. Gawne Notes : 17-2-1919

.... that his liberty is only so far circumseribed that he has to live in one of two places in Tinnelvely district and the Criminal Investigation Department censors his publications, lectures, etc. He has given a guarentee that he has done away with political agitation.

- Extract form G.O. 710, 711, Home (Judl. dept 28-3-1919) [38]

## *மலபார் மாப்பிள்ளைமார் புரட்சி*

சென்னை ஆவணக் காப்பகத்தில் இந்த ஆவணங்களை தேடி எடுத்து படித்தபோது, வீரத்துடனும் விவேகத்துடனும் பணியாற்றிய ஒரு மகாகவியின் நிலையை எண்ணியபோது எனது கண்களில் நீர் பெருகியது. அது மட்டுமா, அது சம்பந்தமான ஆவணங்களில் மலபாரில் வெள்ளையரை எதிர்த்திட்ட முஸ்லிம் தீரர்கள் பலரின் பெயர்களைப் பார்த்தேன்.

38. Dr. G. Kesavan, Bharati and imperialism - A documentation, 1987, P. 67A - 70.

சரித்திரத்தில் மறைக்கப்பட்ட தீரர்களின் வரலாறு குறித்த விஷயங்களை வெளியுலகம் அறியச் செய்திட எவ்வளவு முயற்சிகள் இனியும் மேற்கொள்ள வேண்டியதிருக்கிறதென்பதனை அப்போது எண்ணிக் கொண்டேன். (அது குறித்து ஆய்வும் தொடர்ந்து செய்தும் வருகிறேன்.)

## *ரங்கசாமி அய்யங்காரின் முயற்சியும் விடுதலையும்*

கடலூர் சிறைக்கு சுதேசமித்திரன் ரங்கசாமி அய்யங்கார் வந்தார்; பாரதியைக் கண்டு பேசினார். பின்னர் அவர் அன்னிபெசண்ட்டு, சர்.சி.பி.இராமசாமி ஐயர், நீதிபதி மணி அய்யர் ஆகியோருடன் பாரதியின் விடுதலைக்காக ஆளுநரைச் சந்தித்தார்.

☆ ***நெல்லை மாவட்டத்தில் பாரதி விரும்பும் இரண்டு ஊர்களில் எதிலாவது ஒன்றில் மட்டுமே வாழ்க்கை நடத்த வேண்டும்.***

☆☆ ***பாரதியின் படைப்புகள்,பேச்சுகள் ஆகியவற்றை முன்கூட்டியே குற்றப் புலனாய்வுத் துறைக்கு அனுப்பி அது தணிக்கை செய்த பின்னரே அவற்றை வெளியிட வேண்டும்.***

☆☆☆ ***அரசியல் நடவடிக்கைகள் அனைத்திலிருந்தும் பாரதி நீங்கிவிட வேண்டும்.***

என்ற நிபந்தனைகளை அரசு விதித்தது, அதனை பாரதி ஏற்றுக்கொண்டதால் மாவட்ட நீதிபதி முன் *14.12.1918*இல் வரவழைக்கப் பட்டு பாரதி விடுதலை செய்யப்பட்டார். இதனை *16.12.1918* 'சுதேசமித்திரனும்' *17.12.1918* 'தேசபக்தனும்' செய்தியாக வெளியிட்டது.

விடுதலையானபின் நெல்லை மாவட்டம்கடையத்திற்கு வந்து பாரதி வாழ்ந்து வந்தார். எட்டயபுரம் ராஜராஜேந்ர மகாராஜா ஸ்ரீ வெங்கடேசு ரெட்டப்பப்பூபதி மன்னருக்கு சீட்டுக்கவிகள் எழுதினார். அவரது வறுமை நிலையின் உச்சத்தை அந்தக் கடிதங்கள் இன்னும் உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. உதவிகேட்டு அனுப்பிய அந்தச் சீட்டுக்கவிகள் பலனளிக்கவில்லை. பாரதியின் முயற்சிகள் எதுவும் சரிப்பட்டு வரவில்லை; வறுமை விரட்டியது. கடையத்தில் கடும் பசியில் வாடினார்; கோவிலில் வரிசையில் நின்று உண்டக்கட்டியை வாங்கித் தின்றார்; அப்போதும் பசி அடங்கவில்லை; திரும்பவும் வரிசைக்கு சென்றார். "என்ன திரும்பவும் வருகிறாயோ?" என்று பாரதியைப் பிடித்து கீழே தள்ளினர். பாரதியா கீழே

விழுந்தார்? இல்லை! திறமையானவர்களை கைதூக்கிவிட மறுத்த இந்த சமுதாயத்தில் அறிவு அல்லவா கீழே தள்ளப்பட்டது.

27.8.1920ல் தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ள பாரதியை அழைத்தனர். அதில் அவர் கலந்து கொள்ளவில்லை. அதன்பின்னர் 1920 நவம்பரில் திரும்பவும் பாரதி சென்னை சென்றார். சுதேசமித்திரன் பத்திரிகையில் துணையாசிரியர் ஆனார்.

## காந்தியடிகளும் பாரதியும்

சென்னையில் காந்தியை சந்தித்த பாரதியார் 'மிஸ்டர் காந்தி இன்று மாலை ஐந்தரை மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப்போகிறேன். அக்கூட்டத்திற்கு தாங்கள் தலைமை வகிக்க முடியுமா?' என்று கேட்டார். அன்று வேறு அலுவல் இருந்ததால் காந்தி தலைமையேற்க இயலாது என்றார். உடனே பாரதி 'மிஸ்டர் காந்தி நான் போய் வருகிறேன், தாங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்.' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். [39]

## கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.

சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணியஐயர், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம்பிள்ளை, வீரத்துறவி சுப்பிரமணிய சிவா, மகான் அரவிந்தர், புரட்சி வீரர் வ.வே. சுப்பிரமணிய ஐயர், பாரதிக்கு குருவாக விளங்கிய பாலகங்காதர திலகர், நிவேதிதாதேவி, குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணச்சாமி, பாரதியை பாரறியச்செய்த பரலி. சு.நெல்லையப்பர், வா. ராமசாமி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பாரதியின் மெய்க்காப்பாளர் குவளை கிருஷ்ணமாச்சாரியார், பாரதியின் இலக்கிய நண்பர்கள் விவேகபாநு மு.ரா. கந்தசாமிக்கவிராயர், மதுரை கோபாலகிருஷ்ண அய்யர், மகேசகுமாரசர்மா, சோமசுந்தரபாரதியார், வ.வேதநாயகம் பிள்ளை, மு. இராகவஐயங்கார், தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர், பாரதியின் அரசியல் துறை நண்பர்கள் ராஜாஜி, சத்தியமூர்த்தி, அரங்கசாமி ஐயர், ஜி.ஏ. நடேசன், வி. கிருஷ்ணசாமி அய்யர், சுரேந்திரநாத் ஆர்யா, வி.சர்க்கரை செட்டியார், நீதிபதி மணி அய்யர், திரு.வி.கல்யாணசுந்தரனார், பாரதியின் பத்திரிகை துறை நண்பர்கள்

39. அ. இராமசாமி, தமிழ்நாட்டில் காந்தி, 1969, பக் 248, 249.

நீலகண்ட பிரம்மச்சாரி, பி.பி.சுப்பையா, நாகசாமி, எம். சீனிவாசன், ஜி.ஆர். சீனிவாசன், எம்.எஸ்.சுப்பிரமணிய அய்யர், நடேச அய்யர், வெ. சாமிநாத சர்மா, ராமானுஜலு நாயுடு, வெ.ப. சுப்பிரமணிய முதலியார், நாமக்கல் கவிஞர், ச.து.சு. யோகி, எட்டயபுரம் ஜமீன்தார், விருதை சிவஞான யோகி, சக்கரவர்த்தினி பி. வைத்தியநாத ஐயர், சங்கீதம் சுப்பராம தீட்சதர், ஈரோடு தங்கப்பெருமாள் பிள்ளை, அரவிந்தர் ஆசிரமம் அமுதன், வையாபுரிப் பிள்ளை, பி.ஸ்ரீ. ஆசாரியா, டி.எஸ்.சொக்கலிங்கம், ஏ.பி. சுப்பிரமணிய ஐயர், அ.மாதவையா, ராய.சொக்கலிங்கம், லட்சுமண அய்யர், சங்கர ஐயர் கிருஷ்ணசாமி ஐயர், விசுவநாதபாரதி, லட்சுமிநரசு, கனகலிங்கம், ஜெயராமநாயுடு, ராமஷேசய்யர், நஞ்சுண்டராவ் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், ஈசுவரஐயர், பால், சுத்தானந்த பாரதி, சிங்காரவேலு, வீரேசலிங்கம் பந்தலு, விபினசந்திரபால், காவ்யகண்ட கணபதி சாஸ்திரிகள், சூரத் சங்கரநாராயண ஐயர், சூரத் ராமசாமி அய்யர், சூரத் வெங்கட்ரமணராவ், சூரத் கிருஷ்ணமாச்சாரியார் சபர்தே, அஜித்சிங், யங் இந்தியா லாலாலஜபதிராய், மகாத்மா காந்தியடிகள், கனகசபைப்பிள்ளை, ஜேம்ஸ், கசின்ஸ், சட்டசபை துளசிராம், பாரதியின் குடும்ப நண்பர்கள் பண்டிட் எஸ்.நாராயணஅய்யங்கார், ஆறுமுகம் செட்டியார், கருணாநிதி கிருஷ்ணசாமிப்பிள்ளை, சைகோன் சின்னையா, கிருஷ்ணசாமி செட்டியார், விளக்கெண்ணெய் செட்டியார் என்ற மாணிக்கம் செட்டியார், டி.விஜய ராகவாச்சாரி, சோம தேவசர்மா, பொன்னு முருகேசம்பிள்ளை, என். சுப்பிரமணிய ஐயர், பாரதியைப் போற்றிய உறவினர்கள் அப்பாத்துரை (மச்சினர்) அரிகரசர்மா கிருஷ்ணசிவன், குப்பம்மாள், பாகீரதி, வள்ளியம்மாள், சி. விசுவநாதன், மனைவி செல்லம்மா, மகள் தங்கம்மா, மகள் சகுந்தலா குருசாமி, ஸ்தாணு சங்கரன், சிற்றன்னை மகள் லட்சுமி பாரதியைப் போற்றிய மாதர்கள் பாக்கிய லட்சுமி, யதுகிரி, அன்னிபெசன்ட் அசலாம்பிகை, மங்களம்மாள், பாரதிக்குப் பண உதவி செய்த எம்.எஸ்.துரைசாமி ஐயர், மண்டயம் திருமலாச்சாரி, மண்டயம் சீனிவாச்சாரி, சுந்தரேச ஐயர், சீனிவாச வரதன், வெல்லச்செட்டியார், வயி.சு.சண்முகம் போன்ற எண்ணற்ற பெருமக்களின் வாழ்வோடு தொடர்பு கொண்டிருந்த பாரதி காங்கிரஸ் வரலாற்றிலும் தனக்கென தனியான இடத்தைப் பெற்றிருக்கிறார்.

ஆங்கிலேய ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளை ஆண்டுக் கணக்கிலே சந்தித்து உடல் நலிவுற்ற பாரதி, பொருளாதாரத்திலும் நசிந்து, உள்ளமும் கலங்கிய நிலையில் கடலூர் சிறையிலிருந்து, ஆட்சியாளர்களின் நிபந்தனைகளை ஏற்று வெளியே வந்தார் என்றாலும் அவரின் தேச பக்தியை எவரும் குறைத்து மதிப்பிடல் முடியாது. அதுமட்டுமா?

"மாஜினியின் பிரதிக்கினை" யென்று இத்தாலிய விடுதலைக் குரலையும், "பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்துச்" சொல்லியும், 'மாகாளி பராசக்தி' உருசிய நாட்டினில் கடைக்கண் வைத்தாள்; அங்கே ஆகா வென்றெழுந்தது பார் யுக புரட்சி என்று புதிய ருஷியாவின் எழுச்சி பற்றியும்கவிதைகளைப் பாடிய பாரதி தான் பிறந்த எட்டயபுரத்திற்கு வெகு அருகில் இருக்கும் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றி ஒரு வரி கூட பாடவில்லை. இந்த நிலைக்கும் அவரை தள்ளிவிட்டது யார்?

அவரின் அந்த நிலைக்கு காரணம் அவரைக் கவனியாது விட்டு விட்ட காங்கிரஸ்; அத்துடன் அறிஞனைப் போற்றிட மறுத்த சமுதாயம்; புலவனின் வறுமையைப் போக்கிட உதவிடாத சமுதாயம்.வளமையான கவிதை; வறுமையான வாழ்வு இத்தகைய இக்கட்டான சூழலில் அப்படியொரு முடிவினை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார் பாரதி. ஒரு சில வருடங்களிலே 12-9-1921இல் இவ்வுலகிலிருந்தும் மறைந்தார்.

## தேசபக்தச் செம்மல் பாரதி

*"சதையை துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம்*
*சாயுமோ.... ஜீவன் ஓயுமோ...?*
*இதயத்துள்ளே இலங்கும் மஹாசக்தி*
*எதுமோ! நெஞ்சம் வேகுமோ?....."* என்ற

தேசபக்தரின் சொல்லிற்கு இலக்கணமாக வீரத்துடன் முழங்கியவர் பாரதி. தேசபக்தியே சர்வ சுபங்களுக்கும் மூலதனமானது என்ற கொள்கையின் அடிப்படையில் பால இந்தியா சபை, சுதேசி வஸ்து பிரசாரணி சபை, பாலபாரத சங்கம், சென்னை ஜனசங்கம் முதலிய காங்கிரஸ் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அரசியல் அமைப்புக்களின் தோற்றத்தில் பாரதியின் பங்கு சிறப்பானது. காங்கிரசில் அவர் ஆற்றிய அரும்பணிகள் வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

காங்கிரஸ் குறித்து இந்தியா பத்திரிகையில் அவர் எழுதியுள்ள தலையங்கங்கள் காலத்தால் அழியாதவை; அவை மட்டுமே தனி நூலாக வெளிவரும் தகுதியுடையது. பாரதியார் களம்பாடியது 1906 தொடங்கி 1910 வரையுள்ள ஐந்தாண்டுக்காலத்தில் தான் என்பர் ம.பொ. சிவஞானம் .[40]

"பாரதியின் தேசபக்தி கடன் வாங்கின சரக்கல்ல அது அவனுடைய சொந்த சொத்து தமிழ்நாடு தன் பாரதி அப்படித்தான் எனக்குச் சொல்லத் தெரியும்" [41] என்ற வ.ரா.வின் வரிகளை எண்ணிப்பார்க்க வேண்டியதும்

40. பாரதியார் பற்றி ம.பொ.சி. பேருரை, 1983, பக் 133.
41. வ.ரா., மகாகவி பாரதியார், 1949, பக் 20.

அவசியமாகிறது. அரசியல் களத்தில் பிரகாசித்த காலத்தில் பாரதி தமிழகத்தின் குரலை எதிரொலித்தார். அதனைத்தான் வ.ரா. அவர்களின் "தமிழ்நாடு தான் பாரதி'' என்ற வரிகள் உணர்த்திக் கொண்டிருக்கிறது. பாரதி தன்னையே தமிழகமாக ஆக்கிக்கொண்டார் என்றால் காங்கிரசில் அவரது ஈடுபாடு என்று தனியாக பிரித்துப் பார்த்திட இயலாத அளவில் அவர் அரும்பணியாற்றினார்.

பாரதி உயிருடன் வாழ்ந்த போது அவரது பாடலால் காங்கிரஸ் வளர்ந்தது. அப்போதும் பாரதியை காங்கிரஸ் மறந்தது. வறுமையில் வாடி வதங்கி பாரதி மறைந்தபோது அவரது படத்தின் மூலமும் காங்கிரஸ் வளர்ந்தது. இருந்தும், இறந்தும் காங்கிரஸிற்கு உரமாகத் திகழ்ந்தவர் பாரதி.

ஆனால் பாரதியின் சொந்த வாழ்வில் அவரது அரசியல் போர்க்களத்தில் அவர் சந்தித்த சோதனைகள், அனுபவித்த வறுமைகள் இவை எந்த அரசியல் இயக்கத்தோழனுக்கும், தளபதிக்கும் வரக்கூடாத ஒன்றாகும்.

## அறிஞர் அண்ணா போற்றிய கவிஞர்

மகாகவி பாரதி குறிப்பிட்ட காலங்களில் புயலெனச்சுற்றி சுற்றி பணியாற்றினார். சில வேளைகளில் தனது வாழ்நாளை அமைதியாக கழித்தார்; வறுமையில் வாடினார்; வளமான கவிதைகளை வார்த்துக் கொண்டே இருந்தார். காங்கிரஸ் அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பின்விலகிப் போனார்; தனியானதொரு சிகரமாகத் திகழ்கிறார். அத்தகைய பாரதியைப் போற்றுவோம். "நாட்டில் பாரதி காட்டிய பாதையை நாடு நன்கு அறிய வேண்டும். பரங்கியை ஓட்டிவிடுவது மட்டுமல்ல அது; நாட்டின் கேட்டுக்குக் காரணமான உள்ள அனைத்தையும் ஓட்டி புதிய சமூக அமைப்பாக்கும் பாதை அந்தப் பாரதி பாதையை நாம் போற்றுவோம்'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறிய கருத்தை நம் சிந்தையில் ஏற்று நடைபோடுவோம்.[42]

அறியாமையை அகற்றிட
மடமையை நீக்கிட
பகுத்தறிவைப் பரப்பிட
புதிய வாழ்வு பெற்றிட
மறுமலர்ச்சிக்கு வித்திட்ட
மகாகவி பாரதி போதித்த பாடல்களை எண்ணிச் செயல்படுவோம்.

---

42. மகாகவி பாரதியார் - அண்ணாத்துரை பாரதிதாசன் 1948 பக். 40.